

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, நீர்வளத்துறையின் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலக வளாகத்தில் பரம்பிகுளம் ஆழியாறு திட்டத்தினை நிறைவேற்றக் காரணமாகயிருந்த பெருந்தலைவர் கு.காமராஜர், வி.கே.பழனிச்சாமி, சி.சுப்பிரமணியம், நாமகாலிங்கம் ஆகியோருக்கு திருவுருவச் சிலையுடன் நினைவு அரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் கிரியப்பனவர், கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, நகர்மன்ற தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன், பொதுப்பணித்துறை (கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) செயற்பொறியாளர் செல்வராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### கரூரில் ரூ.58.25 கோடியில் திட்டப் பணிகள் திறப்பு:

# ரூ.162.22 கோடியில் 18,332 பயனாளிகளுக்கு நல உதவிகள்!

# ரூ.3.35 கோடி மதிப்பில் புதிய திட்டப்பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**கரூர், ஜூலை 12 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கரூர் புதிய பேருந்து நிலையம் உள்ளிட்ட 58.25 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 13 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, 3.35 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 18,332 பயனாளிகளுக்கு 162.22 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 9.7.2025 அன்று கரூர் திருமாநிலையூரில் ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையத்தை, கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி முன்னிலையில் திறந்து வைத்து பார்வையிட்டார்.

தொடர்ந்து கரூர் திருமாநிலையூர் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நகராட்சி நிர்வாகத் துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை ஆகிய துறைகளின் சார்பில் (கரூர் புதிய பேருந்து நிலையம் உள்பட) 58.25 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 13 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் வைரமடையில் காவிரி மீட்புக் குழுவின் உறுப்பினர் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.முத்துசாமி அவர்களுக்கு திருவுருவ சிலை அமைக்கும் பணி, அரவக்குறிச்சி அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி மற்றும் கிருஷ்ணராயபுரம் அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி என மொத்தம் 3.35 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 13,124 பயனாளிகளுக்கு 115.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விலையில்லா வீட்டுமனை பட்டாக்களையும், 20 நபர்களுக்கு திருமண உதவித் தொகை, தற்காலிக இயலாமைக்கான உதவித் தொகை, இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை காசோலைகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 61 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களையும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் அண்ணல் அம்பேத்கார் தொழில் முன்னோடிகள் திட்டம், கலைஞர் கைவினைத் திட்டம், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 15 நபர்களுக்கு 7.34 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

**புதிய மின்னணு குடும்ப அட்டைகள்!**

தொடர்ந்து 1,095 நபர்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளையும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்களையும், 10 பயனாளிகளுக்கு திரவ எரிவாயு சலவைப் பெட்டிகளையும், 30 பயனாளிகளுக்கு சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர் அட்டைகளையும், முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் மூலம் 114 முஸ்லீம் மகளிருக்கு உதவித் தொகை காசோலைகளையும், தாட்கோ திட்டத்துறையின் சார்பில் முதலமைச்சரின் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 8 பயனாளுக்கும், மகளிர் சுய உதவிக் குழு பொருளாதார கடனுதவித் திட்டத்தின் கீழ் 24 சுய உதவிக் குழுக்களுக்கும் நலத்திட்ட உதவிகளையும் துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

வேளாண்மைத் துறையின் சார்பில் 280 பயனாளிகளுக்கு மானாவாரி பகுதி மேம்பாடு ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகளையும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் 5 நபர்களுக்கு ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளையும், மகளிர் திட்டத்தின் கீழ் 76 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 415 மகளிருக்கு 7.21 கோடி ரூபாய்க்கான வங்கி கடன் இணைப்புகளையும் வழங்கினார்.

**பயனாளிகளுக்கு நல உதவிகள்!**

தோட்டக்கலைத் துறையின் சார்பில் நுண்ணீர் பாசனத் திட்டம், மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டம், தேசிய தோட்டக் கலை இயக்கம் ஆகியவற்றின் கீழ் 340 பயனாளிகளுக்கு 1.92 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், கூட்டுறவுத் துறையின் சார்பில் பயிர் கடன், கால்நடை பராமரிப்புக் கடன், மத்திய காலக் கடன், மகளிர் சுய உதவிக் குழுக்கடன், மாற்றுத்திறனாளிகளுக்கான கடன், தாட்கோ திட்ட கடன் என மொத்தம் 2,069 பயனாளிகளுக்கு 20.19 கோடி ரூபாய்க்கான கடனுதவிகளையும், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் மூலம் 378 குழந்தைகளுக்கு நிதி ஆதரவுத் திட்டத்தின் கீழ் பராமரிப்பு உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும் வழங்கினார்.

வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 15 பயனாளிகளுக்கு ஆழ்குழாய் கிணறு அமைத்தல், பண்ணைக் குட்டை அமைத்தல், பவர் டில்லர், பவர் வீடர் ஆகிய நலத்திட்ட உதவிகளையும், 5 மாணவர்களுக்கு கல்வி கடனுதவிகளையும், கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் 150 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணைகளையும், ஊரக வீடுகள் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் 160 பயனாளிகளுக்கு வீடுகளை பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கான ஆணைகளையும், தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் சார்பில் ஒரு நபருக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையினையும் என இவ்விழாவில் மொத்தம் 18,332 பயனாளிகளுக்கு 162.22 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வி. செ.ஜோதிமணி, கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, திருமதி க.சிவகாம சுந்தரி, மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், மேயர் திருமதி. க.கவிதா, துணை மேயர் ப.சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி ஸ்ரீலேகா தமிழ் செல்வன், மாநகராட்சி ஆணையர் திருமதி கி.மு.சுதா, குளித்தலை சார் ஆட்சியர் திருமதி. தி.சுவாதி ஸ்ரீ, கோட்டாட்சியர் மு.முகமது பைசல் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவாரூர் மாவட்டம், கோட்டூர் வடக்கு ஒன்றியக் கழகத்தில் "ஓரணியில் தமிழ்நாடு" நிகழ்வில் தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் பங்கேற்று பொதுமக்களிடம் கழக அரசின் சாதனைகளையும், ஒன்றிய அரசின் வேதனைகளையும் எடுத்துக்கூறி செயலி மூலம் படிவத்தில் இணைத்தார். உடன் ஒன்றியச் செயலாளர் பால.ஞானவேல், அவைத்தலைவர் ராயர் பெர்னாண்டோ மற்றும் பி.டி.ஏ. முகவர்கள், பி.எல்.ஏ.2. முகவர்கள் உடன் இருந்தனர்.

### கல்லூரிகள் தோறும் அமைக்கப்பட்டுள்ள

# தமிழ் மாணவர் மன்ற உறுப்பினர்களை அதிகரிப்போம்!

## கழக மாணவரணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

*சென்னை, ஜூலை 12 -*

தமிழ்நாட்டில் கல்லூரிகள் தோறும் அமைக்கப்பட்டுள்ள தமிழ் மாணவர் மன்றங்களை விரிவுபடுத்தவும், உறுப்பினர்களை அதிகரிக்கவும் தி.மு.க. மாணவரணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக மாணவர் அணி சார்பில் கல்லூரிகள் தோறும் தமிழ் மாணவர் மன்றம் அமைப்பது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் பூச்சி முருகன், மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி – மாநில நிர்வாகிகள் பங்கேற்றனர்.

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நாடாளுமன்ற உறுப்பினர், கழகத் துணைப் பொதுச்செயலாளர், கழக மாணவர் அணிப் பொறுப்பாளர் ஆ.ராசா தலைமையில், இணை அமைப்புச்செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் பூச்சி எஸ்.முருகன், மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி முன்னிலையில் "கல்லூரிகள் தோறும் கழக மாணவர் மன்றத்தை கட்டமைப்பது தொடர்பாக" கழக மாணவர் அணி மாநில நிர்வாகிகள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ண சங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் உடனான ஆலோசனைக் கூட்டம் நேற்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

**தீர்மானம் – 1**

தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளின்கீழ் பிறபடுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகள், ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகள் என்ற பெயர்களில் இயங்கி வரும் வரும் ஏழை மாணவர்களுக்கான பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் இனி 'சமூக நீதி விடுதிகள்' என்ற பொதுப் பெயரால் இனி அழைக்கப்படும் என அறிவித்திருக்கும் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு மாணவர் அணி சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த அறிவிப்பு சமூகத்தில் நிலவும் சாதி வேறுபாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் முற்றிலுமாக விலக்கும் திராவிட மாடல் அரசின் பயணத்தில் முக்கியமான மைல் கல்லாக அமைந்துள்ளது. மேலும், "இளம் சந்ததியினர் அனைவரும் சாதி வேறுபாடின்றி ஒன்றிணைந்து, எதிர்கால தமிழ்ச் சமுதாயத்தை, சமத்துவச் சமுதாயமாகக் கட்டமைத்திட இந்த அறிவிப்பு அடித்தளம் அமைக்கும். சமூக நீதி, சமநீதி, சட்ட நீதி ஆகியவை அனைவர்க்கும் பொது என்ற நிலையை உருவாக்க திராவிட மாடல் அரசு தொடர்ந்து பங்காற்றும்" என்ற முதல்வரின் அறிவிப்புக்குப் பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**தீர்மானம் – 2**

கழகத் தலைவர் அவர்கள் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற பெயரில், வாக்குச்சாவடிதோறும் 30 சதவீதம் வாக்காளர்களை தி.மு.க. உறுப்பினர்களாக்கும் இயக்கத்தை முன்னெடுத்துள்ளார்கள். ஒன்றிய அரசு மும்மொழிக் கொள்கை என்ற ஏமாற்றுக் கொள்கையை தமிழ்நாட்டிற்குள் திணிக்க எத்தனிக்கிறது. தமிழ் செம்மொழிக்கு குறைவான நிதி ஒதுக்கி சிறுமைப்படுத்தும் வேளையில், மக்களை மதவாதத்தின் அடிப்படையில் பிளவு படுத்த நினைக்கும் வேளையில், தமிழர்கள் அனைவரும் சாதி, மதம், ஊர், நிலம் என அனைத்து வேறுபாடுகளையும் கலைந்து ஓரணியில் நிற்க வேண்டிய தேவை உள்ளது. இதற்காகக் கழகத் தலைவர் அவர்கள் முன்னெடுத்துள்ள ஓரணியில் தமிழ்நாடு என்ற மக்கள் இயக்கத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள கல்லூரிகள் மற்றும் பட்ட மேற்படிப்புநிறுவனங்களில் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தின் நோக்கத்தை வலியுறுத்தி துண்டுப் பிரசுரம் மூலம் பிரசாரம் மேற்கொள்வது என முடிவு செய்யப்படுகிறது.

**தீர்மானம் – 3**

1944ஆம் ஆண்டு திருவாரூரில் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் உருவாக்கி அதற்கு தலைவர் ஆனவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்த அமைப்பின் மூலமாக தன்னுடன் பயிலும் சக மாணவர்களை அழைத்துக்கொண்டு இந்தி திணிப்பிற்கு எதிராக போராடியதோடு 16 வயதிலேயே 'மாணவர் நேசன்' என்ற பத்திரிகையையும் துவங்கி அதை வெற்றிகரமாக நடத்தியவர். மேலும் மாணவர் மன்றங்கள் மூலம் தமிழின் தொன்மையோடு, பகுத்தறிவு, சுயமரியாதை, சமூக நீதி, சமத்துவம் போன்ற கொள்கைகளையும் மாணவர்களிடையே பரப்புரை செய்து இளைஞர்கள் இடையே மிகப்பெரிய அரசியல் எழுச்சியை உருவாக்கியவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியொட்டி, கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில் தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகள் தோறும் தமிழ் மாணவர் மன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அம்மன்றங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதையும் விரிவுபடுத்துவதையும், புதிய மாணவர்களை மன்றங்களில் உறுப்பினர்களாகச் சேர்ப்பதையும் விரைவுபடுத்த வேண்டும் என மாணவர் அணி தீர்மானிக்கிறது.

**தீர்மானம் – 4**

1959ஆம் ஆண்டு அமலுக்கு வந்த இந்து சமய அறநிலையத்துறைச் சட்டத்தில் கோவில்களுக்குக் காணிக்கையாக வரும் நிதியில் இருந்து கல்வி நிலையங்கள் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்விப் பணியை பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் தொடங்கி எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா உட்பட அனைத்துத் தலைவர்களும் செய்து வந்துள்ளனர். அந்தப் பணியை முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் அரசு இன்னும் கூடுதலாக மேம்படுத்தி, ஏழை, எளிய மாணவர்களுக்கும் கல்வி கிடைப்பதை உறுதி செய்திருக்கி றார். வரலாறும் தெரியாத, கொள்கையும் புரியாத எடப்பாடிப் பழனிச்சாமி தனது தற்குறித்தனத்தை வெளிப்படுத்தும் வகையில் அறநிலையத் துறையின் நிதியில் ஏன் கல்வி நிலையங்களைக் கட்டுகிறார்கள் எனக் கேட்டு தான் ஒரு பா.ஜ.க.வின் அடிவருடி என்பதைப் அம்பலப் படுத்திக்கொண்டிருக்கிறார். அறநிலையத் துறை சார்பில் கல்லூரிகள் கட்டுவதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்விக் கனவைச் சிதைக்கும் அயோக்கியத்தனத்தில் இறங்கியிருக்கும் எடப்பாடி பழனிசாமிக்கு கழக மாணவர் அணியின் சார்பில் வன்மையான கண்டனங்கள் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### மனிதநேய மக்கள் கட்சி மாநாட்டின் கோரிக்கையை ஏற்றுப் பேசிய

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நெஞ்சார்ந்த நன்றி!

## மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா அறிக்கை!

*சென்னை, ஜூலை 12 -*

"மனிதநேய மக்கள் கட்சி மாநாட்டின் கோரிக்கையை செவிசாய்த்து பேசிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி" என்று மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அக்கல்லூரியின் பவள விழா ஆண்டின் தொடக்க விழாவில் "இஸ்லாமியர்கள் அரசியல் உரிமையைக் காப்பாற்றும் இயக்கமாக திமுக இருக்கும் " என்று முதல்வர் பேசியிருக்கிறார்.

ம.ம.க.வின் மதுரை எழுச்சி பேரணி மாநாட்டின் கோரிக்கையைச் செவிசாய்த்து மேடையில் பேசிய முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று காந்தி வழி அம்பேத்கர் வழி பெரியார் வழி என்று மாணவர்களுக்குப் பல வழிகள் உள்ளன. ஆனால் ஒருபோதும் கோட்சே வழியில் சென்று விடக்கூடாது. மாணவர்களுக்குக் கல்விதான் நிலையான சொத்து என்றும் சமூக அக்கறையும் தேவை என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் பேசியிருப்பது வரவேற்கத்தக்கது.

காலத்தின் தேவை அறிந்து மாணவர்களுக்குச் சரியான அறிவுரையை முதல்வர் அவர்கள் வழங்கி இருக்கிறார்.

சிறுபான்மையினர் உரிமையைக் காப்பதிலும் மாணவர்களுக்கு நேரிய வழிகாட்டியாகத் திகழ்வதிலும் தமிழ்நாடு முதலமைச்சரின் உள்ளத்தில் நிறைந்திருக்கும் அக்கறையின் வெளிப்பாடாக அவரது இன்றைய உரை அமைந்திருப்பது பாராட்டுக்குரியது.

இவ்வாறு எம்.எச்.ஜவாஹிருல்லா தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



புதுக்கோட்டை மாவட்ட கழக அலுவலகத்தில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் திருஉருவச் சிலைக்கு, புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி முன்னிலையில், புதிதாக அமைக்கப்பட்ட கழக மாற்றுத்திறனாளிகள் அணியின் மாநிலத் தலைவராக நியமிக்கப்பட்ட ரெ. தங்கம் மாலை அணிவித்து மரியாதை செய்தார். மாவட்டக் கழக நிர்வாகிகளும், ஒன்றிய கழக நிர்வாகிகளும், நகரக் கழக நிர்வாகிகளும், மாமன்ற உறுப்பினர்களும் மற்றும் ஏராளமான மாற்றுத்திறனாளிகள் உடன் பங்கேற்றனர்.